සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2024 (2025)
இறுதி தவணைப் பரீட்சை - 2024 (2025) / Year End Term Test - 2024 (2025)

ශ්‍රේණිය / தரம் / Grade : 6

# கணிதம் - I/II

කාලය / நேரம் / Time : 02 மணி


නම / பெயர் / Name : ..............................................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. : ..............................................


- அனைத்து வினாக்களுக்குமான விடையை இவ்வினாத்தாளில் எழுதுக.
- ஒரு வினாவிற்கு இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

01. 43521634 எனும் இலக்கத்தை நியம வடிவில் எழுதி சொற்களில் எழுதுக.

02. வழங்கப்பட்டுள்ள படத்தில் வட்டத்தின் உள்ளே உள்ள 3 புள்ளிளை எழுதுக.




03. தரப்பட்டுள்ள திண்ம உருவில் உள்ள உச்சிகளின் எண்ணிக்கையும் விளிம்புகளின் எண்ணிக்கையையும் தனித்தனியே எழுதுக




உச்சிகளின் எண்ணிக்கை : .............................

விளிம்புகளின் எண்ணிக்கை : .............................

04. இடைவெளி நிரப்புக.

$$\begin{array}{cccc} & 2 & 7 & 3 \\ + & 5 & \square & 9 \\ \hline & 8 & 6 & \square \\ \hline\hline \end{array}$$


05. -2 இற்கும் 3 இடையில் உள்ள முழு எண்களை எண்கோட்டின் மீது குறித்துக் காட்டுக.




06. < அல்லது > அல்லது = எனும் குறியீகளைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.

i) $\frac{1}{8}$ ……… . $\frac{1}{3}$ i) $\frac{3}{4}$ ……… . $\frac{6}{8}$

07.



------------

(i) அடுத்துவரும் கோலத்தை வரைந்து காட்டுக.

(ii) இடைவெளி மூலம் காட்டப்பட்டுள்ள எண் எவ்வகை எண்ணாகும்

08. பொருத்தமான முறையில் இடைவெளி நிரப்புக

பி.ப 9.30 மணியாகும் போது கடிகாரத்தின் மணித்தியால முள்ளாலும் நிமிட முள்ளாலும் அமைக்கும் கோணத்தின் வகை

1) ………………………………………… 2) ……………………………………….


09. 3575 எனும் எண்ணின் நூறாம் இடம் குறிக்கும் எண்பெறுமானம் முதலாம் இடத்தின் எண் பெறுமானத்தின் எத்தனை மடங்காகும்

10. 2,4,5,6,8,9 எனும் எண்களை முறையாக தெரிவு செய்து வட்டத்தின் உள்ளே எழுதுக




முதன்மை எண்கள் சேர்த்தி எண்கள்

11. தரப்பட்டுள்ள அடரின் சிறிய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 1cm ஆகும். நிழற்றப்பட்ட பகுதி அகற்றப்பட்ட பின்னர் மீதி அடரின் பரப்பளவை வர்க்க சென்றி மீற்றர் காண்க.



12. i) நிலைக்குத்துத் தளத்திற்கு ஓர் உதாரணம் தருக : ……….................................................
ii) தளம் நிலைக்தாக உள்ளதா என தீர்மானிக்க உதவும் உபகரணத்தைப் பெயரிடுக.
………………………………………………

13. பாத்திரம் A இல் உள்ள அரிசியின் அளவு B பாத்திரத்தில் உள்ள அரிசியின் எத்தனை மடங்காகும்?





14. 200 இலும் குறைந்த 9 இன் மிகப் பெரிய மடங்கு யாது?

15. 2.5,2.05,2.51 எனும் தசம எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

16. 36 எனும் எண்ணை சதுர எண்கள் இரண்டின் பெருக்கமாக எழுதும் முறைகள் அனைத்தையும் எழுதுக.

17. 7025 ml என்பதை l மற்றும் ml இல் எழுதுக.

18. படத்தின் சுற்றளவைக் காண்க



19. ஒரு கூடையில் பழுத்த பழங்கள் 18 உம் பழுக்காத பழங்கள் 24 உம் உள்ளன. பழுத்த பழங்களுக்கும் பழுக்காத பழங்களுக்கும் இடையிலான விகிதத்தை எழுதி அதனை எளிய வடிவில் எழுதுக.

20. மரமொன்றில் 15 பறவைகள் காணப்பட்டன. அதில் m எண்ணிக்கையான பறவைகள் பறந்து சென்றன எனின்

i) மீதியுள்ள பறவைகளின் எண்ணிக்கைக்கான அட்சர கணிதக் கோவையை எழுதுக

ii) $m = 9$ எனின் மீதியுள்ள பறவைகளின் எண்ணிக்கையைக் காண்க.

## பகுதி II

**முதலாம் வினா உற்பட ஏனைய 5 வினாக்களுக்கு விடை தருக.**

01 a) ஓர் ஆடைத் தொழிற்சாலையில் நாளொன்றில் தைத்து முடிக்கப்பட்ட ஆடைகள் பற்றிய தகவல் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| ஆடை வகை | வரவுக் குறி | ஆடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சட்டை | 𝍸 𝍸 𝍸 𝍸 | 20 |
| மேற் சட்டை | ................................ | 18 |
| காற் சட்டை | 𝍸 𝍸 /// | ............ |
| டீ சேட் | ................................ | 20 |
| பாவாடை | ................................ | 27 |

(புள். 04)

i) மேலுள்ள அட்டவணையின் இடைவெளிகளை பூர்த்தி செய்க

ii) ○ எனும் குறியீட்டின் மூலம் தைக்கப்பட்ட ஆடைகள் 4 இனை வகைக்குறிக்கின்றது எனின், இதனை பட வரைபில் குறித்துக் காட்டுக. (புள் . 05)

| ஆடை வகை | பட வரைபு |
|---|---|
| சட்டை | |
| மேற் சட்டை | |
| காற் சட்டை | |
| டீ சேட் | |
| பாவாடை | |

iii) பட வரைபை பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

a) அந் நாளில் கூடுதலாக தைத்து முடிக்கப்பட்ட ஆடை வகை எது? (புள் . 01)


b) அந் நாளில் தைக்கப்பட்ட ஆடைகளில் சட்டைகளை விட எத்தனை பாவாடை அதிகமாக தைக்கப்பட்டது (புள் . 01)

c) ஒரே அளவாக தைக்கப்பட்ட ஆடைகளின் வகைகள் எவை (புள் . 01)

d) தைக்கப்பட்ட மொத்த ஆடைகள் எத்தனை (புள் . 02)

e) தைக்கப்பட்ட காட்சட்டைகளின் எண்ணிக்கையை தொகுதி எண்ணாகவும் தைககப்பட்ட மொத்த ஆடைகளை பகுதி எண்ணாகவும் கொண்டு பின்னமாக எழுதுக (புள் . 02)

**புள்ளிகள் 16**

2. (a) i)  தரப்பட்டுள்ள உருவில் $\frac{5}{8}$ இனை நிழற்றிக் காட்டுக (புள் . 02)

ii) சமவலுப்பின்னமாக அமையுமாறு இடைவெளி நிரப்புக.

(i) $\frac{3}{7} = \frac{15}{\phantom{0}}$ (ii) $\frac{9}{12} = \frac{\phantom{0}}{4}$ (புள் . 02)

iii) வழங்கப்பட்டுள்ள பின்னங்களை ஏறுவரிசையில் எழுதுக.

$\frac{5}{8}, \frac{3}{4}, \frac{1}{2}$ (புள் . 03)

b) பாடசாலைக் கட்டடம் ஒன்றின் இடம் பின்வருமாறு வேறாக்கப்பட்டுள்ளது.

| வகுப்பறைக்காக | கணித அறைக்காக | வாசிகசாலைக்காக | அலுவலகத்திற்காக |
|---|---|---|---|
| $\frac{2}{5}$ | $\frac{1}{10}$ | $\frac{1}{5}$ | $\frac{6}{20}$ |


i) வகுப்பறைக்காகவும் வாசிகசாலைக்காவும் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த இடம் எவ்வளவு (புள் . 01)

ii) வாசிகசாலைக்காவும் கணித அறைக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த இடம் எவ்வளவு (புள் . 02)

iii) அலுவளகத்தை விட எவ்வளவு இடம் கூடுதலாக வகுப்பறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (புள் . 02)

**புள்ளிகள் 11**

03. a)




i) படத்தில் தரப்பட்டுள்ள தள உருக்களை பெயரிடுக.

A- ………………………………………

B- ………………………………………

C- ………………………………………

(புள் . 03)

ii) தளவுரு C இன் சிறப்பியல்புகள் 02 தருக (புள் . 02)

b) i) கனவுரு அமைக்கக் கூடிய அமைப்பொன்றை வரைந்து காட்டுக (புள் . 02)

ii) சதுரமுகிகள் இரண்டினை முகங்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு ஒட்டும் போது உருவாகும் திண்மத்தை பெயரிட்டு அதன் முகங்கள், உச்சிகள், விளிம்புகள் எண்ணிக்கையைக் குறிப்பிடுக. (புள் . 04)

**புள்ளிகள் 11**

04. a) சரஸ்வதி வித்தியாலயத்தின் தரம் 06 இல் கல்வி கற்கும் 198 பெண் மாணவிகளும் 150 ஆண் மாணவர்களும் சுற்றுலா ஒன்று செல்வதற்காக தயாரானார்கள்.

i) சுற்றுலாவில் கலந்துகொண்ட தரம் 06 மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது (புள் . 02)

ii) ஒரு பஸ் வண்டியில் 60 மாணவர்களை ஏற்ற முடியும் எனின், சுற்றுலாவில் ஈடுபடுத்த வேண்டிய பஸ் வண்டிகளின் ஆகக் குறைந்த எண்ணிக்கையைக் காண்க. (புள் . 03)

iii) இச் சுற்றுலாவிற்காக மாணவர் ஒருவரிடம் ரூபா 1000 அறவிடப்படுகிறது எனின், சுற்றுலாவிற்காக சேரக்கப்படும் மொத்த பணத் தொகையைக் காண்க. (புள் . 02)

b) சுற்றுலா சென்ற மாணவர்கள் பாடசாலையில் இருந்து மு.ப 5.00 மணிக்கு வெளியாகி பி.ப 10.15 மணிக்கு மீண்டும் பாடசாலைக்கு வந்து சேர்ந்தனர்.

i) மீண்டும் வந்து சேர்ந்த நேரத்தை நியம முறையில் எழுதுக (புள் . 02)

ii) சுற்றுலாவிற்காக செலவிட்ட முழு நேரத்தைக் காண்க. (புள் . 02)

**புள்ளிகள் 11**

05. (a) சமனின் தாய் சந்தைக்குச் சென்று வாங்கிக் கொண்டு வந்த பொருட்கள் மற்றும் அவற்றின் திணிவுகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பொருட்களின் பெயர் | திணிவு |
|---|---|
| கிழங்கு | 2 kg |
| வெங்காயம் | 1 500 g |
| பயறு | 500 g |
| கரட் | 1 kg |
| லீக்ஸ் | 250g |
| மிளகாய் | 100 |
| வாழைப் பழம் | 1 kg 300 g |

i) வாழைப் பழத்தின் திணிவை கிராமில் தருக (புள் . 01)

ii) வெங்காயத்தின் திணிவை கிலோ கிராம் மற்றும் கிராமில் தருக (புள் . 01)

iii) கிழங்கின் திணிவு வாழைப் பழத்தின் திணிவிலும் எவ்வளவு அதிகமாகும் (புள் . 02)

iv) சமனின் தாய் வாங்கிய பொருட்களின் மொத்தத் திணிவு 8 kg இலும் அதிகமாகவில்லை எனக் கூறினாள். அக் கூற்று சரியா ? தவறா? காரணங்களுடன் விளக்குக. (புள் . 03)

v) மிளகாய் 1 kg இன் விலை ரூபா 440 எனின் அவர் வாங்கிய மிளகாயின் விலையைக் காண்க. (புள் . 01)

b) | 2 | | 7 | | 5 | காட் அட்டைகள் மூன்றையும் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய

i) மிகப் பெரிய எண்ணை எழுதுக. : ……………………..
அவ்வெண்ணின்,

ii) 5 என்ற இலக்கம் குறிக்கும் இடப் பெறுமானம் : ………………………

iii) 5 ஆல் வகைக் குறிக்கும் எண் : …………………………… (புள் . 03)

**புள்ளிகள் 11**

06. i) 3 இன் இரண்டு மடங்கு யாது? (புள் . 01)

ii) 4 இன் வர்க்கம் யாது? (புள் . 01)

iii) 125 என்பதை 5 இன் வலுவாக எழுதிக் காட்டுக. (புள் . 02)

iv) கீழுள்ள கூற்றுக்கள் உண்மையானவையா பொய்யானவையா எனக் கூறுக. (புள் . 02)

(a) $4^2 = 2^4$ : ................................


(b) $3^3 = 2^3$ : .............................

v) $2^4 +$ ............ = 41 இடைவெளிக்கு பொருத்தமான எண்ணை சுட்டி வடிவில் எழுதுக. (புள் . 02)

vi) $2^2 \times 3^2 \times 5^2$ இன் பெறுமானம் காண்க. (புள் . 03)

**புள்ளிகள் 11**

07.




(i) தரப்பட்டுள்ள படத்தில் கோணங்களின் பருமன் அடிப்படையில் எவ்வகையான கோணங்கள் என எழுதுக.

a = ..................................................

b = ..................................................


c = ..................................................

d = ..................................................

(புள் . 04)

(ii) பின்வளை கோணம் ஒன்றை இணங்கண்டு அதனை e எனக் குறிக்க. (புள் . 02)

b) i) ஒருவர் புள்ளி A யில் இருந்து D வரை பயணம் செய்த விதம் காட்டப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அட்டவணையில் இடைவெளி நிரப்புக. (புள் . 02)




| பயணப் பாதை | திசை |
|---|---|
| A யில் இருந்து B வரை | |
| B யில் இருந்து C வரை | |

vi) அவன் பயணம் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு? (புள் . 01)

vii) D யில் இருந்து பார்க்கும் போது A யின் திசை யாது ? (புள் . 02)

**புள்ளிகள் 11**

******